**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

## DEPOSITION OF WITNESSES

## STC NO.667/2025

**PW.2**

**Date: 04.03.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.பத்மநாபன் (கா.உ.ஆ) | வயது | 52 |
| கணவர்/தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | வட்டம் | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the 05th **day of March 2026**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை;**

1. நான் தற்போது தாழம்பூர் காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் திரு.சுமன் என்பவரின் கையெழுத்துகள் காவல் நிலைய கோப்புகளை பார்வையிட்ட வகையில் எனக்கு நன்கு தெரியும். கடந்த 22/06/2025 அன்று மதியம் 03.30 மணியளவில் நிலைய பொறுப்பில் இருந்தபோது இந்த வழக்கின் புகார்தாரர் அ.சா. 1 பிரபு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அப்போதே நிலைய குற்ற எண்.199/2025, ச.பி 126(2), 296(பி), 115(2), 351(2) பா.நி.ச கீழ் முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்துள்ளார். (**22/06/2025 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. இந்த வழக்கின் எதிரியை அன்று மாலை 04.30 மணியளவில் கைது செய்து சாட்சிகள் சங்கீத்குமார் மற்றும் அர்ணால்ட் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று கைப்பற்றுதல் மகஜர் மூலமாக 10 அடிநீளமுள்ள மஞ்சள் நிற கயிறு ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றியுள்ளார். (**22/06/2025 தேதியிட்ட எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்டுள்ள அ.சா.ஆ.3 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், 10 அடிநீளமுள்ள மஞ்சள் நிற கயிறு அ.சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**). பின்பு எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்டுத்தியுள்ளார்.

3. பின்பு அன்று மாலை 06.45 மணி அளவில் சம்பவ இடம் சாட்சிகள் கிருஷ்ணன் மற்றும் சதீஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளர். (**22/06/2025 தேதியிட்ட பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ. 5 மற்றும் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்பு சாட்சிகள் அ.சா.1, கலை மகன் சதீஷ் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம் 95 மூலமாக நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். (**படிவம் 95 அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) புலன் விசாரணை நிறைவு செய்து எதிரிகளின் மீது 126(2), 296(பி), 115(2), 351(2) பா.நி.ச கீழ் இறுதி அறிக்கை தாக்கல்

செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–</u>

4. நான் சாட்சியம் அளித்தது போன்று நான் சொல்லும் நாள், நேரம் மற்றும் இடத்தில் அவ்வாறு ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இவ்வழக்கினை சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரியின் மீது வழக்கு பதிவு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

NILAVARASAN KASI

Digitally signed by NILAVARASAN KASI

District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.